IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.289/2018
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.20 PM.

வா.சா. 1 சாட்சி லெட்சுமி க.பெ.தேவராஜ்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.09.2025 in accordance with the provisions of Act XX141.**

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் தற்போது எனக்கு தனித்து பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. இன்று வரை எனக்குதான் தனித்து பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்து இன்று வரை எனக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். A அட்டவணை சொத்து மற்றும் B அட்டவணை சொத்து என்ன சொத்து என்றால் தெரியாது.

2. A அட்டவணை சொத்து 20 அடியுள்ள ஊராட்சி சொத்து என்றால் எனது சொத்தாகும். நான் ஊராட்சிக்கு எழுதிகொடுக்கவில்லை. A அட்டவணை சொத்து உள்ள தெருவிற்கு பெயர் ஊராட்சி தெரு என்றால் பொது தெருவாகத்தான் உள்ளது. ஊர் மக்கள் அனைவரும் மேற்படி தெருவழியாகத்தான் செல்கிறார்கள் என்றால் சரிதான்.

3. 1ம் பிரதிவாதி வீட்டிற்கு எந்த பக்கம் எனது வீடு உள்ளது என்றால் மேற்கு பக்கம் எனது வீடு உள்ளது. ஆனால் 1ம் பிரதிவாதி

வீட்டிற்கு அருகில் எனது வீடு இல்லை. A அட்டவணை சொத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாக B அட்டவணை சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் மண் குமித்து, பிளாட்பாரம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி ஆக்கிரமிப்பு காண்பிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் கோப்புகள் **நீ.ம.சா.ஆ. 1** ஆகவும், வரைபடம் **நீ.ம.சா.ஆ. 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் நான் B அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறும் பகுதியானது 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தின்படி அவரது இடத்திற்குள்தான் உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாக குறிப்பிட்டுள்ளார்.

5. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. B அட்டவணை சொத்தை பொறுத்து நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதிக்கு B அட்டவணை சொத்தில் மின் கம்பம் அமைத்து மின் இணைப்பு கொடுக்ககூடாது என்று பரிகாரம் கேட்ட நிலையில் மேற்படி மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி மின் இணைப்பு வழங்கக்கூடாது என்ற பரிகாரமும் அற்றுப்போயிவிட்டது என்றால் சரியல்ல. B பரிகாரமும், C பரிகாரமும்

எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. A பரிகாரமானது பொது பாதையில் மின் வாரியம் அமைத்திருந்த மின் கம்பத்தை அகற்றவேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 7. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் மின்வாரியத்திற்கு அறிவிப்பு அனுப்பி மின் வாரியமும் பதில் அறிவிப்பு அனுப்பியது என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் மேற்படி மின் கம்பம் இடைஞ்சலாக இருந்தால் உரிய பணம் செலுத்தி தகுந்த இடத்தை வழங்கினால் மாற்றிகொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் மேற்படி பணம் செலுத்தி மாற்றிகொள்ள நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7. 1ம் பிரதிவாதி 13ம் எண் பிளாட்டையும், 2ம் பிரதிவாதி 14ம் எண் பிளாட்டையும் விலைக்கு வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். 14ம் எண் பிளாட்டை தற்போது வைத்துள்ள 2ம் பிரதிவாதி மகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தவறான வழக்குமூலம் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து விபரமும் தவறானது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

(3 முதல் 6 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 03.45 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.16 14:11:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.